பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 08 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளில் தமது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று புதுதில்லி திரும்பினார்.
2. நக்ஸல் தீவிரவாதத்தை முற்றிலும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
3. பெரிய தொழில் நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதிலும், வேலைவாய்ப்பை அளிப்பதிலும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
4. இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
5. பாரிஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான இந்திய பாரா துப்பாக்கிசுடும் குழு இன்று புறப்பட்டுச் சென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளில் பிரதமர் திரு நரேந்திரமோடி தமது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு இன்று பிற்பகல் தில்லி திரும்பினார்.

முதலில் போலந்து நாட்டுக்கு பயணம் மேற்கொண்ட பிரதமர், வார்சாவில் அந்நாட்டு பிரதமர் திரு டொனால்டு டஸ்க்-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து விவாதித்தார்.

இருதரப்பு மண்டல மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பல்வேறு விஷயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

நீடித்த மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு குறித்தும் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

போலந்து பயணத்தை முடித்துக் கொண்டு உக்ரைன் சென்ற பிரதமர், அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கியை, தமது தூதுக்குழுவினருடன் சந்தித்து பேசினார்.

கிவ் நகரில் நடைபெற்ற இந்த பேச்சுக்களின்போது உக்ரைனில் சமுதாய மேம்பாட்டு திட்டங்களை மேற்கொள்வது, விவசாயம், கலாச்சார பரிவர்த்தனை, போதைப்பொருள் தடுப்புக்கான வழிமுறைகள் உள்ளிட்டவற்றில் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்தியா – உக்ரைன் இடையே கையெழுத்தானது.

உக்ரைனும் - ரஷ்யாவும் தங்களுக்கு இடையேயான போரை முடிவுக்குக் கொண்டுவர ஆக்கப்பூர்வமான வழிகளை காண வேண்டுமென்று இந்திய தரப்பில் பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

அமைதியை நிலைநாட்டுவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவளிக்கும் என்றும் திரு நரேந்தீரமோடி, உக்ரைன் அதிபரிடம் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சுய உதவி குழுக்களைச் சேர்ந்த 48 லட்சம் பெண்கள் பயன்பெறும் வகையில் இரண்டாயிரத்து 500 கோடி ரூபாய் சுழல் நிதியை பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை விடுவிக்கிறார்.

மேலும் 26 லட்சம் குழு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ஐயாயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனுதவியையும் அவர் விடுவிக்கவுள்ளார்.

நாளை மகாராஷ்டிரா மாநிலம் **Jalgaon** நகரில் லட்சாதிபதி பெண் தொழில் முனைவோர் சம்மேளன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த நலத்திட்ட உதவிகளை பிரதமர் வழங்கவுள்ளார்.

பெண்களை லட்சாதிபதியாக்கும் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோர் லட்சாதிபதிகளாக உயர்த்தப்பட்டுள்ளனர்.

மூன்று கோடி பெண்களை லட்சாதபதிகளாக உயர்த்த வேண்டுமென்ற இலக்குடன் மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

நாளை மகாராஷ்டிரா மாநில பயணத்தை முடித்துக் கொண்ட பின், ராஜஸ்தானின் ஜோத்பூர் செல்லும் பிரதமர், அம்மாநிலத்தில் உள்ள உயர்நீதிமன்றத்தின் பவள விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்கிறார்.

உயர்நீதிமன்றத்தில் புதிய அருங்காட்சியகத்தையும் திரு நரேந்திமோடி திறந்து வைக்கிறார்.

**[]<<<>>>[]**

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு இடையேயான ஆய்வுக் கூட்டம் இன்று சத்திஷ்கர் தலைநகர் ராய்ப்பூரில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தலைமையில் நடைபெற்றது.

இந்த மாநிலங்களின் தலைமைச் செயலர்கள், காவல்துறை தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு அமித்ஷா, சத்திஷ்கர் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து நக்ஸல் தீவிரவாதத்தை

முற்றிலுமான அகற்றுவதற்கான நடவடிக்கைகளை பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசும், மாநிலத்தில் ஆளும் பிஜேபி அரசும் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பெரிய தொழில் நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதிலும், லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதிலும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பத்தாவது இந்தியா சர்வதேச சிறு குறு மற்றும் நடுத்தர புத்தாக்க தொழில் கண்காட்சி மற்றும் மாநாட்டில் பேசிய அவர், நாட்டில் உள்ள பெரிய தொழில் நிறுவனங்கள் லட்சக்கணக்கான சிறு தொழில் நிறுவனங்களை சார்ந்துள்ளதாகக் கூறினார்.

சுற்றுலா, உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றிலும், நாட்டின் ஏற்றுமதியிலும் சிறு தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு மகத்தானது என்று அவர் தெரிவித்தார்.

உலக தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்யும் வகையில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான அனைத்து

உதவிகளையும் மத்திய அரசு செய்து வருவதாக அமைச்சர் திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

இதனை நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்கள், ளும் அஞ்சல் செய்யும்.

டி டி நியூஸ், பிரதமர் அலுவலகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றின் யூ டியூப் சேனல்களிலும் இதனை கேட்கலாம்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

இதனை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

[]<<<>>>[]

உடல் தகுதிமிக்க இந்தியாவை உருவாக்க வேண்டுமென்ற பிரதமர் திரு நரேந்திரமோடியின் கனவை இளைஞர்கள் நனவாக்க வேண்டுமென்று மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

தேசிய விளையாட்டுக்கள் தினம் இம்மாதம் 29-ஆம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி அவர் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த நாளை ஒட்டுமொத்த நாடும் கொண்டாடும் வகையில் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

ஒவ்வொரு இந்தியனும் தனது உடல் நலனை காத்து சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய விளையாட்டு தினம், விளையாட்டு வீரர்களை சிறப்பிக்கும் நாள் மட்டுமல்ல நமது உடல் நலனை விளையாட்டுக்கள் மூலம் மேம்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாளாகவும் அமைந்துள்ளது என்றும் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

[]<<<>>>[]

இந்தியா – சிங்கப்பூர் இடையே இரண்டாவது சுற்று வட்டமேசை மாநாடு வரும் திங்கட்கிழமை சிங்கப்பூரில் நடைபெறுகிறது.

இந்தியா தரப்பில் மத்திய அமைச்சர்கள் திரு பியூஷ்கோயல், திருமதி நிர்மலா சீதாராமன், டாக்டர் ஜெய்சங்கர், திரு அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

சிங்கப்பூரின் அமைச்சர்களுடன் இருதரப்பு கூட்டு முயற்சிகள், பொருளாதாரம், வர்த்தக உறவுகள், கலாச்சார தொடர்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளன.

[]<<<>>>[]

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவித்திட தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெயசங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில், நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 11 மீனவர்களை கைது செய்து அவர்களின் மீன்பிடி விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாதவர்களால் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாகவும் அவர் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விரைந்து விடுவிப்பதற்கு தூதரகம் மூலமாக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திரு மு ஸ்டாலின், அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

இந்திய கடற்படை போர்க்கப்பல் ஐ என் எஸ்-மும்பை இலங்கைக்கு மூன்று நாள் பயணமாக செல்கிறது.

தலைநகர் கொழும்பு துறைமுகத்துக்கு வரும் திங்கட்கிழமை சென்றடையும் இந்த கப்பலை இலங்கை கடற்படை முறைப்படி வரவேற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மூன்று நாட்கள் கொழும்புவில் நிறுத்தப்பட்டிருக்கும் ஐ என் எஸ்-மும்பை போர்க்கப்பலில் இலங்கை விமானப்படைக்குத் தேவையான உதிரி பாகங்கள், கடல்சார் பாதுகாப்புக்கான கருவிகள், டார்நியர் விமானத்துக்கான பாகங்கள் ஆகியவை எடுத்துச் செல்லப்படுகின்றன.

[]<<<>>>[]

பாரிஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இந்திய பாரா துப்பாக்கிசுடும் குழு இன்று புறப்பட்டுச் சென்றது.

பத்து பேர் கொண்ட இந்த குழுவில் **Avani lekhara, Manish Narwal** உள்ளிட்ட பத்து பேர் கொண்ட குழுவினர் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.

**[]<<<>>>[]**

சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் வீரர்  ஷிக்கர் தவான் அறிவித்துள்ளார்.

38 வயதான சிக்கர்தவான் 167 ஒருநாள் போட்டிகள், 37 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 68 டுவெண்டி – டுவெண்டி போட்டிகளில் விளையாடியுள்ளார். மொத்தம் பத்தாயிரத்து 867 ரன்களை அவர் எடுத்துள்ளார்.

சிக்கர்தவான் 15 போட்டிகளில் கேப்டனாகவும் செயல்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

***End of News***

24 08 2024 7 15 நேபாள் விபத்து – பிரதமர்

மஹாராஷ்ட்ராவிலிருந்து நேபாளத்திற்கு சென்ற சுற்றுலா பேருந்து மார்ஷியாண்டி நதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவி வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

இந்த விபத்தில் 27 இந்தியர்கள் உயிரிழந்ததாக காத்மண்டுவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

எல்கே /ச　　　　　　　　　　　　　　　　　　　　　　தில்லி / 8